ந.க. 18270/2025/ஈ1,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்,

நாள் :28.06.2025

# சுற்றறிக்கை

பொருள்: கிராம நிர்வாகம் - ஈரோடு மாவட்டம் - மூன்று வருடங்களுக்கு மேலான கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல்- அறிவுரை வழங்குதல்- தொடர்பாக.

பார்வை:
1 அரசாணை (நிலை) எண் 625 வருவாய்த்துறை நாள் 06.07.1995
2 அரசாணை (நிலை) எண் 521 வருவாய்த்துறை நாள் 17.061998
3 அரசாணை (நிலை) எண் 375 வருவாய்த் (பணி 8(1) துறை நாள் 19.10.2015
4 அரசாணை (நிலை) எண் 574 வருவாய்த் (பணி 8(1) துறை நாள் 17.10.2020
5 அரசாணை (நிலை) எண் 97, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 11.03.2024
6 அரசாணை (நிலை) எண் 266, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 22.05.2025
7 அரசாணை (நிலை) எண் 312, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 04.06.2025
8 கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கடிதம் எண் வநி 2(2)/02-28/1/2024 நாள் 09.06.2025
9 கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கடிதம் எண் வநி 2(2)/02-28/1/2024 நாள் 13.06.2025

பார்வையில் காணும் கடிதங்களின்பால் அனைத்து வருவாய் வட்டாட்சியர்களின் கவனம் வேண்டப்படுகிறது.

1) பார்வை 5 மற்றும் 8-இல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களது கடிதத்தில், ஈரோடு மாவட்டத்தில் மூன்றாண்டுகளுக்கு மேலான காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து, மேற்படி காலிப்பணியிடங்கள் நிரப்புவதற்கு பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் மற்றும் அதற்கான கால அட்டவணையும் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2) ஈரோடு மாவட்டத்தில் மூன்றாண்டுகளுக்கு மேல் வட்டம் வாரியாக உள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு

| வ. எண் | வட்டம் | மொத்த வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | மூன்று வருடங்களுக்கு மேல் உள்ள காலிப்பணியிடங்கள் (தற்போது நிரப்பப்பட வேண்டியவை) |
|---|---|---|---|
| 1 | ஈரோடு | 41 | 9 |
| 2 | கொடுமுடி | 24 | 10 |
| 3 | மொடக்குறிச்சி | 29 | 15 |
| 4 | பெருந்துறை | 72 | 39 |
| 5 | கோபிசெட்டிபாளையம் | 51 | 19 |
| 6 | சத்தியமங்கலம் | 53 | 7 |
| 7 | பவானி | 29 | 11 |
| 8 | நம்பியூர் | 27 | 16 |
| 9 | அந்தியூர் | 30 | 14 |
| 10 | தாளவாடி | 19 | 1 |
| | **மொத்தம்** | **375** | **141** |

3) மேற்குறிப்பிட்ட வட்ட வாரியான காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு, கிராம உதவியாளரின் நியமன அலுவலரான வருவாய் வட்டாட்சியர்கள் பார்வை 9-ல் காணும் கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட அட்டவணையின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

| S.L.No | Details | Timeline | Date |
|---|---|---|---|
| 1. | Date of Notification at Taluk level in Newspaper and simultaneously addressing the Employment Exchange | Notification has to be made at Taluk level in Newspapers and simultaneously the Employment Exchange also has to be addressed as early as possible, and not later than first week of July 2025. | 04.07.2025 |
| 2. | Last date for Receipt of Applications | 30 Days from the Date of Notification. | 03.08.2025 |
| 3. | Date of Scrutiny and dispatch of letter for reading and writing skill test | with in 10 days from the Last date of application. | 13.08.2025 |
| 4. | Date of Reading and Writing Skill Test | 21 days from the dispatch of letters to ensure that Communication reaches all eligible applicants.<br>(depending on the Number of candidates the test can be conducted for a period of 7 days if required) | 04.09.2025 |
| 5. | Date of Interview | 15 days from the Last Date of Reading and Writing Skill Test. (Interviews can be conducted over a period of 7 days, if required, depending on the number of candidates) | 20.09.2025 |
| 6. | Publishing of the Final Selection List | 15 Days from the last date of interview. | 05.10.2025 |

4) பார்வை 7-இல் காணும் அரசாணையில் தற்போது தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் பணிக்கான சிறப்பு விதிகளில் விதி 6 மற்றும் விதி 11-க்கு மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) பார்வை 7-இல் காணும் அரசாணையில் கிராம உதவியாளர் பணிநியமனத்திற்கான தேர்வு முறை மற்றும் மதிப்பெண் வழங்குதல் தொடர்பாக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர் நியமனம் தொடர்பாக, பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் கடிதங்களின் நகல்கள் இத்துடன் இணைத்தனுப்படுகிறது. அதன் பேரில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வருவாய் வட்டாட்சியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: அரசாணைகள் மற்றும் கடிதங்கள்

ஒம்/- ச.கந்தசாமி
மாவட்ட ஆட்சித்தலைவர்,
ஈரோடு.

/உண்மை நகல் /உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

28.6.25

பெறுநர் :
அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள்/ஈரோடு மாவட்டம்.

நகல் : சார் ஆட்சியர், கோபிசெட்டிபாளையம்.
நகல் : வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு.
நகல் : மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
நகல் : மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முகாம் உதவியாளர்.
நகல் : ஈ1- இருப்புக் கோப்பிற்கு.